★ இன்பத் திராவிடத்தின் துன்பம் துடைத்திடும் ★

தங்கத் திருநாட்கள் வர இன்னும் நான்கே நாட்கள்!

மாநில மாநாடு கூடும் இடம்

கண்டவர் வியந்திடும் மணிமண்டபம்

திராவிடநாடு

மலர் 10. 9—12—51 இதழ் 24.

இலங்கை 15 சதம்] விலை அணா இரண்டு [மலாய் 12 காசு

மாநாட்டு ஏற்பாடுகள் துரிதமாக நடக்கின்றன

★ மாநாட்டுப் பந்தல் வேலைகள் வெகு மும்முரமாக, துரிதமாக நடந்தபடியுள் ளன. மாநாடு நடைபெறும் S. I. A. A. திடலில் மாநாட் டுப் பணிமனை திறக்கப்பட்டு மாநாட்டுக் காரியங்கள் தடங்கலின்றி தொடர்ந்து நடைபெறுகின்றன.

கிளைக்கழகங்களுக்கு

வேண்டுகோள் — கடைசி முறையாக

உங்கள் ஊர்ப் பெயர் பொறித்த தி. மு. க. கொடி களை தயவு செய்து உடனே அனுப்புங்கள். கொடிமர அமைப்பு வேலை தயாராகி விட்டது—உடனே—உடனே!

தோழர்கள் தினந்தினம் திரண்டு வருகின்றனர், மாநாட்டுப் பந்தலைக் காண!

★ மாநாட்டு வரவேற்புக்குழு தலைவர் என். வி. நடராசன் செய லாளர் **மணிமொழியார்**, காற்றுபோல் திரிந்து காரியங்களைக் கவனித்து வருகின்றனர். காஞ்சிபுரம் தோழர் **புட்டாசாமி**, அங்கேயே தங்கி ஆக்க வேலைகள் அத்தனைக்கும் ஊக்கமளித்து வருகிறார். பொதுச் செயலாளர் சி. என். ஏ. வும் நேரில் சென்று மாநாட்டு அமைப்பு வேலைகளைப் பார்வையிட்டு வந்தார்.

மாநாட்டுப் பந்தல் அமைப்பில்; முக்கால் பாகம் முடிந்துவிட்ட தென்றே கூறலாம். ஓவியக் காட்சிக் கானபந்தல் அமைக்கப்பட்டாகிவிட் டது. காஞ்சியில் தயாரிக்கப்பட்ட படங்களும், லாரிகளில் ஏற்றப்பட்டு சென்னைக்கு எடுத்துச் செல்லப் பட்டுவிட்டன. ஓவியக் காட்சி அமைப்புக்கான வேலைகள் தொடங் கப்பெற்று, நல்லமுறையில் காட்சி அமைப்பு இருக்க வேண்டிய எல்லா வசதிகளும் செய்யப்பட் டிருக்கிறது. காட்சி சாலையின் இரு பக்கங்களிலும் படங்கள் இருக்கும் படிச் செய்து, இடையிலிருந்தபடி பார்க்கும்படியாக வழியமைப்பு நடந்திருக்கிறது.

கடைவீதியும், பிரதிநிதிகள் தங் கும் கூடாரமும், அமைக்கப்பட்டி ருக்கின்றன.

முகப்பு அலங்கார வேலைகள் இன்னும் இரண்டொரு தினங்களில் முடிந்துவிடக் கூடும்.

மேடை

மாநாட்டு முக்கிய நிகழ்ச்சிகள் நடக்க, நடுவில் மிகப் பெரிய பந்த லமைக்கப்பட்டிருக்கிறது. ஆயிரக் கணக்கில் மக்கள் அமர்ந்தாலும் தொல்லையின்றி, இருக்க இடமதி கிருந்தே மாநாட்டு நிகழ்ச்சிகளை காணும்படி மேடை அமைக்கப்பட் டிருக்கிறது.

மேடை, நமக்கு, பண்டைத் தமிழகத்தின் பாராள்வோர் கூடும் பளிங்கு மண்டபத்தை நினைப்பூட்டு கிறது.

மன்னர் கொலுமண்டபம், மக் கள் மணி மண்டபமாக மாறிவிட் டது என்று கூறுவதுபோல அலங் கரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மணி மண்டபத்தில் தான் நமது மாநில மாநாட்டு நிகழ்ச்சிகள் இடம்பெறப் போகின்றன என்ற எண்ணம் வரும் பொழுது நம் உள்ளம் உவகையால் வீங்குகிறது.

தொண்டர் படை

நூற்றுக் கணக்கில தொண்டர் படையினர் தயாராக உள்ளனர், அவர்களுக்கு முறைப்படி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அவர் கள் தொண்டே, மாநாட்டுக்கு வரு வோருக்கு மலைப்பை உண்டாக்கும். அவ்வளவு திறம்பட தொண்டர்கள் தொண்டாற்றுவார்கள்.

அவர்கள் நீலக் கால்சட்டை அணிந்து; மேலே வெள்ளைநிற சட்டை போட்டிருப்பார்கள். தலை யில் கருப்பும், சிகப்பும் கலந்த குல் லாய் அணிந்திருப்பார்கள்.

ஊர்வலம்

சென்னை ராயபுரம் தலைமை நிலையக் கட்டிடத்திலிருந்து டிசம் பர் 13ம் நாள் காலை 9-மணிக்கு மாபெரும் ஊர்வலம், ஊராருக்கும், உறுமிடும் எதிர்க் கட்சிக்காரர் களும், உறவு கொண்டாடும் நேச

சாதிக் கொடுமையை எதிர்த் துப்போராடுகிறோம். பேச்சால் எழுத்தால், பாட்டால், நடிப்பால் இதனை வற்புறுத்துகிறோம் நாம். அதே கருத்தை வலியுறுத்து கிறது ஆந்திர நாடகம்

குலமிலேனிபில்லா

அதனை மாநாட்டில் கண்டு களிக்கப்போகிறீர்கள்.

பெரியதோர் பந்தல் கூடிப்பேச
தனித் தனி விடுதிகள் மாவட்டங்களுக்கு
ஓவியக் கலை, ஓர் புறம்!
உண்டிச்சாலைகள் ஓர் மருங்கில்!
சிறியதோர் எழிலூர் மாநில மாநாடு

இடக்கத்தாருக்கும் மட்டுமல்ல, ஊராள்வோருக்கும் நம் கழகத்தின் வலுவைக் காட்டும்: நமக்கு பெருமை சேர்க்கும்.

முக்கிய தோழர்கள்

மாநில மாநாடு ஆதலால், இயக்க முக்கிய தோழர்கள் பலர், மாநாடு துவங்குவதற்குமுன்னரே சென்னை வந்து மாநாட்டுக் காரியங்களில் ஈடு படக்கூடும். இப்பொழுதே நாகர் கோயில் பி. எம். ஜான் வந்துள் ளார்.

கலை விருந்துகள்

கலை நிகழ்ச்சிகளில், எல்லாம் புதிய அம்சங்களே இடம் பெறு கின்றன. நாடகங்கள் எல்லாம் புதியவை. சி. என். ஏ. அவர்கள் தீட்டி பல ஆண்டுகளுக்கு முன் அவரே முக்கிய வேடந்தாங்கி நடத் திய சந்திரோதயம் மீண்டும் நடை பெறும். செழியனின் ஜமீன் மாளிகை. கருணாநிதியின் இளை ஞன் குரல் தெலுங்கு நாடகம், குலமிலேனிபில்லா, பெண்கள் நாட கப் போராட்டம், எல்லாம் நமக்கு புதுமை விருந்தளிப்பதாகவே அமையும். இன்னிசையில் பங்கு கொள்ளும் இசைக் கலைஞர்கள் நமக்கு புத்தம் புதிய இசைவிருந் தளிக்கப் போகிறார்கள்.

வாரீர், வாரீர்!

மாநில மாநாடு காண, இப் பொழுதே தோழர்கள் நாட்களை எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். பலர் ஆர்வமடல்கள் தீட்டிக்கொண் டிருக்கிறார்கள். இலங்கை, ரங்கூன் போன்ற இடங்களிலிருந்தெல்லாம் வருவதாக நமக்குத் தகவல்கள் தந்தபடியுள்ளனர். பம்பாயிலிருந்து ரூ 101, மாநாட்டுக்கு நன்கொடை யனுப்பி வைத்து, பம்பாயிலிருந்து தோழர்கள் பலர் வருவதாகத் தெரி வித்துள்ளனர். திராவிடத்தின் மூலை, முடுக்குகளிலிருந்தெல்லாம் தோழர்கள், டிசம்பர் 13-ம் தேதியை எதிர்பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள். அவர்களை யெல்லாம் வருக, வருக என ஆர்வத்தோடு வரவேற்கிறோம்.

★

நான் கண்ட ரஷ்யா

கலை உலகும் சீர்திருத்த உலகும் ஒருங்கேபோற்றிடும்விதமான பணிபுரிந்து வரும் கலைவாணர் N. S. கிருஷ்ணன் அவர்கள், சோவி யத் ரஷ்யாவின் சோபிதத்தைக் கண்டறிந்து வந்திருக்கும் செய்தி அனைவரும் அறிந்ததே.

மாநில மாநாட்டிலே கலைவாணரை, எல்லா கிளைக் கழகங்களும் ஒருசேர வரவேற்கும் வாய்ப்பும், அவர் உரையைக் கேட்டுக் களிப் பும் பயனும் பெறும் வாய்ப்பும் ஏற்பட்டிருப்பது கண்டு மகிழ் கிறோம்.

"நான் கண்ட ரஷ்யா" எனும் பொருள்பற்றிக் கலைவாணர் பேசுகிறார்! மாநில மாநாட்டின் தனிச்சிறப்புகளிலே இதை ஒன் றாகக் கருதி மகிழ்வுடன் தோழர்களுக்கு இதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்லோருக்கும் இன்புற்று வாழும் இலட்சியம் கொண்டவர் கலைவாணர் N. S K.

அந்த இலட்சியம் நடைமுறையில் ஈடேறியுள்ள நாடு சென்று வந்துள்ள நமது கலைவாணர் நமக்கு அதன் சோபிதம்பற்றிச் சொற் பொழிவாற்ற இசைந்திருக்கிறார்: அவருக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

பஜகோவிந்தம்

சி. என். ஏ.

கோவிந்தா—கோவிந்தா—ஏழுமலையானே—கோவிந்தா—எம்பெருமானே—கோவிந்தா—தீராத வினையெல்லாம்—கோவிந்தா—தீர்த்து வைப்பவனே—கோவிந்தா.

நல்ல வெயில் வேளை — பரள்கிறான் கீழே—மண் உடம்பு பூராவும்—கையிலே உண்டிச் செம்பு—நெற்றியிலே குழைந்து வழிகிறது நாமம்—உள்ளே புளித்துக்கொண்டிருக்கிறது காலையில் சாப்பிட்ட பழைய சோறு — குரலிலே பக்தி பல்ல, கதறல் தொனிக்கிறது—கோவிந்தா கோவிந்தா என்றுதான் கூவுகின்றான் — அபசாரம், அபசாரம் — பஜிக்கிறான் — ஆனால், கொழுந்தசாமியும், கோலம்பாளும், அன்னமும், சொர்ணமும், தந்தனும் தாயம்மாளும் தான் வருகிறார்கள் அவன் குரல் கேட்டு, காலணாவும் கைப்பிடி அரிசியும் தர! கோவிந்தா—கோவிந்தா—கோவிந்தா என்று பஜிக்கிறான், பிழைக்கும் வழியாக அவனுக்கு அதுதான் அமைந்திருக்கிறது.

* * *

கோவிந்தநாம சங்கீர்த்தனம், கோவிந்தா கோவிந்தா—! இராக பாவத்துடன் பஜிக்கிறார் காலட்சேப பாகவதர்—காதிலே வைரம் மின்னுகிறது—விரல்களிலும் கூடத்தான்—பின்புறம் வெள்ளிச் செம்பிலே பால் — மடியிலே தங்கப் பொடி டப்பி—எதிரே சீமான்கள், சிங்காரிகள் — கோவிந்தனை பஜிக்கிறார், ரூபாய் இருநூறு பஜனை பீஸ்!!

* * *

கோவிந்தா—கோவிந்தா—! பஜனை அல்ல—வேலைக்காரனை கூப்பிடுகிறார், பலசரக்குக் கடை பரந்தாம முதலியார், அதட்டும் குரலில்.

* * *

கோவிந்தா கோவிந்தோய் ... ... கேலிக் குரலில் கூவுகிறான் ஒருவன், அவனுடன் இருக்கும் நண்பர்கள் சிரிக்கிறார்கள், காதிலே இடி விழுந்தது போலப் பாவனை செய்து கொண்டு போகிறான், பொன்னுச்சாமி, கிண்டி ரேசில் அந்த வாரம் ஆறு நூறுபதி கொடுத்தவன்.

* * *

போட்ட 'பிளான்' கோவிந்தா ஆயிட்டுது தெரியுமோ?—கேட்கிறார் சரிகைத் தலைப்பாகைக்காரர். சந்தனப் பொட்டுக்காரர், ஆமாம், கேள்விப்பட்டேன், எனக்கு முன்னடியே தெரியும், அவன் பிளான் கோவிந்தா ஆயிடும்னு — என்று கூறுகிறார். இருவரும் எதிர்கடைக்காரனின் வியாபாரத் திட்டம் தோற்றுப் போனதைப் பற்றிப் பேசுகிறார்கள்.

* * *

இப்படிப் பலர், பலவித 'நிலையில்,' கோவிந்தா, கூறுகிறார்கள்—கேட்கிறீர்கள்—ஆனால் இப்போது ஒருவர் கிளம்பியிருக்கிறார், இவர்களைப் போல, வயிறு ஒட்டியவரோ, வாழ்க்கைச் சருக்கலில் நடப்பவரோ அல்ல — சாமான்யமானவரல்ல — பெரியவர் — மிக மிகப் பெரியவர்.

* * *

பஜகோவிந்தம்— பஜகோவிந்தம் என்று கூறுகிறார் — சீமான் சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்!! 'கல்கி'யிலே, தீட்டுகிறார் பஜகோவிந்தம் — கோவிந்தன் பெருமையை, பஜனையின் அருமையை, பாரத மக்களுக்கு விளக்கும், அதி முக்யமான, அதிக அவசியமுள்ள, அதி மேதாவித்தனத்தால் மட்டுமே விளக்கக் கூடிய, 'சேவை'யைச் செய்து வருகிறார்.

பஜகோவிந்தம் —பஜகோவிந்தம்—என்ற பஜனைப்பேச்சு கிளம்புகிறது, அன்பர் ஆச்சாரியாரிடமிருந்து. இதிலிருந்து, கோவிந்தநாமத்தின் சிறப்பு விளங்குகிறதோ, அல்லது ஆச்சாரியாரின் சிறப்பு துலங்குகிறதோ என்பது அல்ல, எனக்குத் தோன்றும் பிரச்னை. பஜகோவிந்தம் சொல்வது என்றால், இப்படிப்பட்ட நிலையிலே சொல்லவேண்டும்—பிடி அரிசிக்கும் பிச்சைக் காசுக்கும் சொல்கிறானே நமது தோழன் — மூன்றுமணி நேரம் விதவிதமாகக் கத்திப் பணம் சேர்க்கும் காலட்சேபக்காரன்—அப்படிப்பட்ட நிலையிலா 'பஜகோவிந்தம்' சொல்கிறார் ஆச்சாரியார்?

குற்றால நீர்வீழ்ச்சியின் குளுகுளுப்பைப் பெற்று, முத்தொள்ளாயிரத்தின் இனிமையைப் பருகி, ஓய்வாக, நிம்மதியாக இருந்து கொண்டல்லவா, பஜகோவிந்தம் கூறுகிறார்—ஏ! அப்பா! அந்த நிலையிலே பஜகோவிந்தம் மட்டுமா, பஜகோபாலம், ஜேஜே விட்டல், அரோராம் அரோராம், என்று எவ்வளவு வேண்டுமானாலும் சொல்லலாமே! குடும்பத்திலே குறைவற்ற செல்வம்—திருமகன் நல்ல நிலையில்—திருமகளும் காரணப் பெயரிட்டார்களோ என்று எண்ணக்கூடிய நிலையில், 'மருமான்' மகோன்னதமான அந்தஸ்துடன், நண்பர்கள் நாடாளும் நாயகர்களாக வீற்றிருக்கும் கோலம், இவ்வளவு 'சுகானுபவம்' பெற்றால 'பஜகோவிந்தம்' என்னவாது!!

தடிப்பயல்—பிச்சை எடுப்பதற்கு இது ஒரு சாக்கு! கோவிந்தனும் கோவிந்தன்! இவன் கூப்பிட்ட உடனே ஏழுமலையையும் தாண்டி ஓடோடி வரமாட்டாரா கோவிந்தன்! பிச்சைபோடு தாயேன்னு கேட்கிறதுதானே—பிச்சைக்காரப பிழைப்பிலேயும் ஒரு கௌரவமான பிழைப்பு! ஏழுமலையானைக் கூப்பிடுகிறான், ஏழுமலையானை! செக்கு உலக்கை போல இருக்கிறானே, வேலை செய்தா என்ன?—'' என்ற பேச்சைக் கேட்கும், உருண்டு உடல் வளர்க்கிறானே, அவனுடைய 'பஜகோவிந்தமா' இது!

''ஆஹா! என்ன மேதாவித்தனம்! எவ்வளவு ஞானத் தெளிவு—தாமரை இலை தண்ணீர் போல, பற்றற்ற மனம்—பரந்த ஞானம்—வேதாந்த விதாதா — பஜகோவிந்தம் செய்கிறார் பாருமே—எவ்வளவு பெரிய காவியத்தை, ஆதி சங்காரின் அருமையான செல்வத்தை, வாரி வாரி வழங்குகிறார் ராஜாஜீ, அவரன்றோ ராஜரிஷி! கலிகால ஜனகர்!''—என்று போற்ற, நான் நீ, என்று போட்டியிட்டுக் கொண்டல்லவா, கிளம்புவர், அன்பரின் பஜகோவிந்தத்தைக்கேட்டு! அவர் 'பஜகோவிந்தம்' செய்வதிலே அர்த்தமிருக்கிறது, நியாயமிருக்கிறது, வசதி இருக்கிறது—அடி வயிறு வலிக்க வலிக்க அல்லவா கத்துகிறான், கோவிந்தா கோவிந்தா என்று நம்மவன் — வாழமுடியாதவன் — அல்லது வாழ்ந்து கெட்டவன்!

பைத்தியக்காரா! பாரடா அவரை! பஜகோவிந்தம் செய்கிறார் — வாழ்க்கை நடத்துவது எப்படி என்ற வாட்டமா வருத்தமா அவருக்கு, பிள்ளை குட்டிகளின் எதிர்காலம் நல்லதாக இருக்க வேண்டுமே, அதற்காகப் பாடுபட வேண்டுமே என்ற நிர்ப்பந்தம் இருக்கிறதா—துளியும் கிடையாதே—எல்லா வசதிகளும் ஏராளமாகக் கிடைத்திருக்கிறது — இருபத்திநாலுமணி நேரத்தில் அரைமணி நேரம்கூட கவலை தோன்றக் கூடிய சிந்தனையோ, கஷ்டம் தரக்கூடிய வேலையோ, இல்லை — அந்த மலர் விரிப்பிலே இருந்து கொண்டு, 'பஜகோவிந்தம்' சொல்கிறார்—சொல்லலாமே—தட்டுத் தடங்கலின்றி வருமே, பஜகோவிந்தம்—உன்நிலை அப்படியா?

'பஜகோவிந்தம்' அவரே சொல்கிறாரே, அவ்வளவு பெரியவரே சொல்கிறாரே, உலகமறிந்தவரே சொல்கிறாரே, அதிலிருந்து, பஜகோவிந்தம் கூறவேண்டியதன் அவசியம் விளக்கமாகிறதே — என்று வாழ உழைக்கும் வகையினர் கூறுவர். பைத்தியக்காரர்கள்! அன்பர் ஆச்சாரியாரின் 'பஜகோவிந்தம்' தருகிற பாடம் அதுவா! கவனியுங்கள் — பஜகோவிந்தத்தை அல்ல பஜகோவிந்தம்கூறுபவரின்நிலைமையை. எப்போது கிளம்புகிறது பஜகோவிந்தம்!!

'யுவர்ஆன'ரில் தொடங்கி, மஹாஜனங்களே! என்று வடிவெடுத்து, 'யுவர்எக்சலென்சி' என்று வளர்ந்து, பாயோ—என்றும் ஆகி, ஜெய்இந்த் கூறி, — இவைகளெல்லாம், படிப்படியாக, முறையாக நடந்தேறிய பிறகு, வர்ணம், கீர்த்தனை, இராகம், எல்லாம் முடிந்த பிறகு வித்வான் பாடுகிறாரே திருப்புகழ், அதுபோல அல்லவா 'பஜகோவிந்தம்' கிளம்பிற்று! கவனித்தாயா அதை?

வக்கீல், தேசத் தலைவர், முதல மந்திரி, வங்காள கவர்னர், வைசிராய், போலீஸ் மந்திரி, இவ்வளவும் முடிந்தபிறகு, 'பஜகோவிந்தம்' — ஏனப்பா கிளம்பாது பஜகோவிந்தம்!! நீ கத்துகிறாய், கதறுகிறாய், தீராதவினை எல்லாம் தீர்த்து வைப்பாய் கோவிந்தா என்று. கோவிந்தன், உன்னைக் கவனிக்கக் கிளம்பி இருந்தால், அவரைக் கனமாக்கி, எக்ஸலென்சி ஆக்கி வைத்திட நேரம் கிடைத்திருக்குமா? கோவிந்தன்தான் அவருக்காக வேலைசெய்ய வேண்டிய அளவு செய்தாகிவிட்டது, இனி பஜகோவிந்தம் என்று அவர் கூறுவது கேட்டு, என்னைக் கவனிக்க வராமலிருப்பாரா—என்று எண்ணுகிறாயல்லவா — தவறு அப்பா, தவறு—இந்த 'பஜகோவிந்தத்தை' அன்பர் ஆச்சாரியார், நிறுத்தப்போவதில்லை, 'ஜனாதிபதி'யாக அவரைக்கோவிந்தன்கொண்டு போய் உட்கார வைக்கிறவரையில் —அப்படி உட்கார வைத்ததும், மறுபடியும், 'ஜெய்இந்த்' கூறுவார்—பஜகோவிந்தம் கூறமாட்டார்—கூறத் தேவையில்லை.

நீ கூட பஜகோவிந்தம்போடு — வேண்டாம் என்று சொல்லவில்லை, ஆனால் இப்போது போடுகிறாயே கூச்சல், கோவிந்தா கோவிந்தா என்று குடல் அறுகிறபடி, பிடி அரிசிக்காக, பிழைக்கும் வழியாக, அப்படி அல்ல — கோவிந்தனும் கவனிக்கமாட்டார், கோவிந்தனின் பக்த கோடிகளும் உன்னைக் கவனிக்கமாட்டார்கள் — பெறவேண்டிய நிலையை ஆச்சாரியார் போலப் பெற்றுவிட்டு, குடும்பத்தை பூந்தோட்டத்திலே இருந்திடச் செய்துவிட்டு, உன் குரலைப் பிறர் மதிப்புடன் கவனிப்பார்கள் என்று தெரிந்ததும், நீயும் வேண்டுமானால் பஜகோவிந்தம் போடு! ஆனால் இப்போது, அந்தப் பஜகோவிந்தத்தையும் பார், நாட்டிலே உழைத்து உருக்குலைபவர் போடும்பஜகோவிந்தத்தையும் பார் — விளைவும் இன்னது என்று புரியும்.

அவ்வளவு பெரியவரே பஜகோவிந்தம் சொல்கிறாரே என்று அதிசயப்படுகிறாயே, எப்படிப்பட்டவர் எத்தகைய நிலையில், எவ்வளவு பதவிகளில் அமர்ந்து அனுபவித்த பிறகு, பஜகோவிந்தம் செய்கிறார் என்பதைத்தான் சிறிது எண்ணிப் பாரேன்—தெளிவு பிறக்கும்.

போகட்டும், அவ்வளவு பெரியவர், பஜகோவிந்தம் கூறுவதன் மூலம், என்ன அரும்பெரும் உண்மையை உலகுக்கும் மற்றவர்களுக்கும் தெரியாத, மறைத்து வைக்கப்பட்ட பேருண்மையை வெளியிட்டுவிட்டார், என்பதுபற்றியாவது, எண்ணிப் பார்த்தாயா? இல்லையே! காதுக்குமட்டும் தானே வேலை கொடுத்தாய் — கருத்துக்கா? இல்லையே!!

யாருக்கும் சுலபத்திலே விளங்காததும், வேதோபநிஷத்துகளின் உட்பொருளையே உள்ளடக்கியதுமான, ஞானபோதனையாமே, அந்த பஜகோவிந்தம்—என்று கூறுவாய், அவ்விதம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது அன்பர் ஆச்சாரியாரின் 'பஜகோவிந்தம்'. சாட்சாத் ஆதி சங்கராச்சாரியார் அருளியது 'பஜகோவிந்தம்' — அந்த அரியபோதத்தை, அனைவரும் அறியவேண்டுமென்ற பேரவாவினால் உந்தப்பட்டு, உத்தமராம் ஆச்சாரியார், வேதாந்தியாம் ஆச்சாரியார், 'பஜகோவிந்தம்' தமிழிலே தருகிறார், என்று சிறப்புரை கூறுகிறார்கள்.

அறிமுக உரையும் சிறப்புரையும் இருக்கட்டும், என்னதான் கூறியிருக்கிறார் பஜகோவிந்தத்தில்—கவனித்துப்பார்!

ஆதிசங்கரர் சொன்னாராம், ஆச்சாரியார் சொல்கிறார், கோவிந்தனை பஜி மனமே! ஏனெனில் கோவிந்தனை பஜித்து அவன் அருளைப் பெறாவிட்டால், யமன் பாசக் கயிற்றை வீசி உன்னைப்பற்றி இழுத்துப் போகவரும்போது, உன்னை இலேசில் விடமாட்டான்—அவனிடம், நீ எதைச் சொன்னாலும் விடமாட்டான், நான் சீமான் என்றாலும் விடமாட்டான், நான் அசகாய சூரன் என்றாலும் விடமாட்டான், இதுமட்டுமல்ல, நான் மிகவும் படித்தவன், மேதாவி, பாணினியின் சூத்ரங்களையே படித்துக் கரைத்துக் குடித்தவன் என்றாலும் விடமாட்டான். ஆகவே கோவிந்தனை பஜி!—இதுதானடபா, மந்திரி, கவர்னர், வைசிராய், பெரிய மந்திரி எனும் பலபதவிகளில் அமர்ந்து அனுபவித்து அலுத்து வந்துள்ளவர், அருளியுள்ள, அறிதற்கரிய உண்மை, பெறுதற்கரிய பேருண்மை — கிடைதற்கரிய ஞானம்!! தெரிந்ததா, தெரிந்துகொள்.

யமபயத்தை வெல்ல கோவிந்த நாமபஜனை செய்யச் சொல்கிறார் ஆச்சாரியார் — ஆதிசங்கரரின் 'பஜகோவிந்தம்' எனும் பொக்கிஷத்திலிருந்து எடுத்துத் தருகிறார் இந்த மாணிக்கத்தை.

இந்த உண்மையை — உண்மையாகவே கேட்கிறேன், ஊரார், ஊராரில், மிகமிகச் சாதாரணமானவர்கள்கூட, அறியாமலா திண்டாடித் திகைத்துக் கொண்டிருக்கிறார்கள்! யமன் பாசக்கயிறை வீசும் போது, என்ன சொல்லலாம், என்ன செய்யலாம், யமபயம்

(5-ம் பக்கம் பார்க்க)

அடுத்த இதழ்

16—12—51ல் வர இருக்கும் "திராவிட நாடு" மாநில மாநாட்டு அலுவல்கள் காரணமாக நிறுத்தப்பட்டு, 23—12—51ல் மாநாட்டு நிகழ்ச்சிகளுடன் வெளிவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்,

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

திராவிடநாடு

காஞ்சி] 9—12—51 [ஞாயிறு

"ஒளிவிளக்கு"

ஏந்த வாரீர்! வாரீர்!!

புதுயுகம் — பூரிப்போடு பார்க்கிறது நம்மை! புல்லேந்தி, வில்லேந்தி வாழ்ந்தமரபை வீழ்த்தியோர் கொட்டம், அடங்கி வருகிறது. நமது எண்ணங்கள் முரசு கொட்டுகின்றன! எங்கும் எக்காளம்! துந்துபிநாதம்!!

'உலர்ந்த சருகு இது. உருப்படுமோ?' என்று, வீழ்ந்த இனம் கண்டு, மனம் நெகிழ்ந்தோர், விழிகள் கூத்தாடுகின்றன — கொண்டாட்டத்தால்; சருகென நினைந்தது மலராகி, மாற்றாரை மயக்கி, எதிர்த்தோரை இழுத்து, மணம் வீசிக் கமழ்கிறதே என்கிற பெரு மகிழ்வால்.

கல்லும் சொல்லும் தாக்க, இழி மொழியும் ஏசலும் ஆலவட்டம் சுற்ற 'இதுகளுக்கேன்!' என்ற பரிதாப மொழியைப் பரிசாகப் பெற்று, நாம் உலவிய நாட்கள், ஓடிவிட்டன! நம்மை, நாடு வரவேற்கிறது! பூரிக்கிறது! நம்மால், வளைந்த வாழ்வு நிமிர்க்கப்படுமென நம்புகிறது—எதிர்பார்க்கிறது!

இத்தகைய நம்பிக்கையைப் பெற நாம் பட்ட கஷ்டங்கள் — இந்த முப்பதாண்டுக் காலத்திலே, அப்பப்ப, கொஞ்சநஞ்சமா! இந்தக் கொள்கை பேசியமைக்காக கொடுமைக்கு ஆளான நமது தியாகப் பரம்பரையின் பட்டியல்தான் எத்தனை பெரிது! காலமெல்லாம், மேடை ஏறி, கர்ஜித்து காச நோயைப் பரிசாகப் பெற்று, கரைந்து மறைந்த அழகரிசாமிகளின் பரம்பரையாயிற்றே, நாம்! நமது வீரக்கோட்டம் புகுந்து உலவி, மறைந்த தளபதிகளின் உழைப்பு—இன்று உருவாகியிருக்கிறது! தடிக்கும் சிறைக்கும், நமது வீரப் பரம்பரை தந்த இரத்தத் துளிகள்—வீண்போகவில்லை. தாளமுத்துவின் அவதி, நடராசனின் தியாகம் — வீணாகவில்லை. நாயர் காட்டிய பாதை, தியாகர் சிந்திய வியர்வை, நடேசனாரின் நல்லார்வம், நாயகம் தந்த உழைப்பு, செல்வத்தின் சிந்தனை, நாகைமணி—மாயவரம் நடராசன், மாதா நாகம்மை, மனங்குன்றா சுயமரியாதைச் சுடரொளிகள் அளித்துச் சென்ற செல்வங்களை, சிதறவிடவில்லை, நாம்! சேர்த்து, எடுத்து, திறன் மிகு கோட்டை, இது பாரீர்! என்று, முரசொலிக்கிறோம்.

நமது பெருமூச்சு, அன்று, அனலையும் புனலையும் வழியவிட்டது! ஆறாத்துயர் கொண்ட துன்ப நாட்கள்—மறைந்து விட்டன! கண்ணீரிலே பிறந்தோம் —கண்ணீரிலேயே வளர்ந்தோம் — நம்மீது அம்பை வீசி ஆர்ப்பரித்த ஆட்சிக் குழுவின், துப்பாக்கிகளும், தடியடிகளும் சிந்தச் செய்த இரத்தத் துளிகள் — மறைந்துவிட்டன! தழும்புகள் மாறவில்லை!! தியாகத் தழும்புகள்—நமது இலட்சிய முத்திரைகள்!!

வேதனைபட்ட ஒரு சமுதாயத்தின்—விழிப்புற்ற தூதுவர்களாகி விட்டோம், நாம். வீழ்ந்த இம் மாபெரும் இனத்தின், நம்பிக்கையைப்பெற நாம் களையவேண்டியிருந்த கல்லும் முள்ளும், காடும் மேடும் ஏராளம். தாங்கிய சங்கடம், விந்தியம்! சிந்திய வியர்வை சமுத்திரம்!

உழைப்பிலே மலர்ந்த மலர்—மக்களின் நல்லாசியைப் பெற்றுவிட்டது. மக்கள், நம்மீது, நம்பிக்கை வைத்துவிட்டனர். இடர் நீக்கப்பாடிவரும் நிலவு, என்று எண்ணாத இளைஞர்களில்லை! நமது கொள்கைகள் வாலிப உலகின் ஆனந்தகீதம்! மாணவர்களுக்கோர் வேல்! மாதர்களுக்கோர் வாள்! மருட்சியடைந்த இனத்துக் குயிரூட்டும் அமுதப்பால!

திரண்டு வந்த தாழியை உடைப்பது போல், உள்ளமெல்லாம் ஓராயிரம் ஈட்டிகள் துளைப்பது போல், புயலும் இடியும் எரிமலையும் தீக்குழம்பும் ஏககாலத்தில் வீசப்பட்டதுபோல், மூன்றாண்டுகளுக்கு முன், ஏற்பட்ட நிகழ்ச்சி, நம்மைக் கலங்கச் செய்தது—ஆனால் கலையச் செய்யவில்லை, மாறாக, நம்மை கற்கோட்டை ஆக்கிவிட்டது. வாலிப உலகின் கண்ணியமும், வீரர்களின் பணி பலமும், இன்று நம்மை விண்ணிலே வரும் நிலவுபோல, தூயவர்களாக்கிவிட்டன! தூய்மைமலர் — தோற்றுவிடும்! மாற்றாரும், மனமாச்சரியம் நீக்கி, மகிழ்கின்றனர்!!

இந்த பொன்னான நேரம்—தியங்த திராவிடத்தில், இதுவரை அரும்பியது கிடையாது. அலைகள் எழும்பி, ஆர்ப்பரிக்கும் கடல் போல பொங்கிக் கிடக்கும்—ஆர்வ வெள்ளத்தை அழிந்த மரபு, கண்டது கிடையாது. அத்தகைய, சிங்கார சிற்றோடை பாய்கிறது, நாடெங்கும்! சிந்து பாடுகின்றனர், மறக்குடி மகளிர் நம்மைக் கண்டு! தேன் குடித்துப்பாடும் வண்டு போல பண்பாடி வருகின்றனர், நமது மாணவர்கள்!

இந்த எழுச்சியைக் காணப் போகிறோம்—மூன்றாண்டின் அறுவடையைக் கண்டு களிக்கப்போகிறோம், முடியுடை வேந்தர் மரபிது என்று வீர கீதம் எழுப்பும் வீரர் கூட்டத்தை நம் கண்கள் காணப் போகின்றன, அவர்தம் கருத்தலைகள், நமது காதுகளிலே முழங்கப் போகின்றன!

சிங்காரச் சென்னையில் வரும் 13, 14, 15, 16 தேதிகளில்—நான்கு நாட்கள் நமது முதல் மாநாடு; மாநில மாநாடு! நாம் கூடும் இடம் தென்னிந்திய உடற்பயிற்சிக் கூட்டத்தாரின் திரு இடம்—S. I. A; A. திடல். அங்கே உடலும், உள்ளமும் இரும்பான, எழுச்சிக் காளைகள் கூடப் போகின்றனர்! பெரியதொரு பந்தல்—நமது இலட்சியக் கோட்டையின் சின்னமாக விளங்குகிறது!

"எவ்வளவு பெரிய பந்தல்...எவ்வளவு பெரிய ஏற்பாடு — இவர்தம் வீரம்தான் என்னே! ஆசைக் கனவுகள் தான் என்னே!!" மாற்றாரும் மயங்குவர்—மாவீரர் மகிழ்வர். மாநில மாநாட்டுக்கென, நாம் அமைத்திருக்கும் நகரம், நம்மால் எழுதிச் சொல்ல இயலாது. காண்போர்திகைப்பர்! பெருமூச்செறிவர்! நமது, வளர்ச்சியின், சின்னம் அது. அந்த மாபெரும் கூடாரத்திலே, திராவிடத்தின் சிங்கங்கள், இலட்சக் கணக்கிலே உலவப் போகின்றனர்—நான்கு நாட்கள்! நமது இயக்க வரலாற்றிலேயே, இதுதான் முதல் முறை! நமது மாநாடு, நான்கு நாட்கள் நடைபெறப் போகிறது!!

பந்தலைச் சென்று கண்டால், நம் இதயம் பூரிக்கும் அந்தக் கீற்றுகள் சாதாரண ஓலைக் கீற்றுகளாயிருக்கலாம்—ஆனால் அவை ஒவ்வொன்றும் நமது ஆசை மூச்சின் பேச்சுக் குரல்கள்! அவைகளைத் தாங்கி நிற்கும் மரங்கள், இரும்பு கர்டர்கள், இலட்சியம் ஊறிப்போன நமது எலும்புகள்!

சிந்தனையைக் கவரும் அந்த சிங்கார இடத்தின் ஒரு பகுதியில், மாபெரும் கொட்டகை யொன்று. அங்கே, கருத்துக்கு விருந்தளிக்கும், ஓவியக் காட்சி. அதன் பெருமையைக் காண்போர், தம் வாழ்வின் இன்ப நேரத்தைச் சந்திப்போராவார். ஓவியக் காட்சி, பக்கத்தில் வெளிநாட்டுத் தூதுவர் தரும் கண் காட்சி! கருத்துக்கு விருந்து! நம் உழைப்புக்கோர், அத்தாட்சி!!

நமது மாநாடு—எதிர்காலத்தின் ஒளி விளக்கு. நமது எண்ணங்கள் முரசொலிக்கும் இலட்சிய முகாம். அங்கே, நம் இலட்சிய முரசொலியோடு, கருத்தை அள்ளும் கலை நிகழ்ச்சிகள் உண்டு. இசை மழை பொழியும்! தமிழ் முழங்கும்! நாடகப்பணி, நமது எண்ணங்களை, விளக்கும்!

"திண் தோள் வீரர்காள்! இத் திருக்காட்சி, காண வாரீர்!" என்று, அழைப்பது போல, நமது கழகக் கொடிகள், பெருமிதத்தோடு பறக்கப் போகின்றன, பாசறையும் தோற்கும்—பாடி வீடெனப் புகல்வரே, அதுவும் வெட்கும்!!

உலகத்தின் வரலாறு அறிவோம், ஆங்காங்கே அரும்பியிருக்கும் புது நிலையும் அறிவோம்! இந்த புதுமைக்குப் பங்கு தரும், நமது பணி ஒளிவிடவேண்டாமா! நாமும், விடுதலை பெற வீராவேசமாகக் கிளம்பவேண்டாமா! வீரர்காள், வெஞ்சமர் புலிகாள், தரணியாண்ட இனத்தின் சந்ததிகாள், உங்கள் வீரஉணர்ச்சியைச் சேர்த்துக்காட்டுவது—நமது மாநாடு, வருக! வருக!! புதுவாழ்வுக்கு அடிகோல், குடும்பங் குடும்பமாகவருக! உமது பெயர், புதுவாழ்வியக்கத்தின் பட்டியலிலே பொறிக்கப் படட்டும்!

* * *

தீயரின் பிடியில் சிக்கிய நாடு தேய்ந்துபோய்விட்ட அந்திநேரம் இது. ஒரு பக்கம் தோல்வி அலைகள் மற்றோர் பக்கம் எதிர்கால நினைவு அலைகள்!! — இந்த இக்கட்டான நேரத்திலே, உழைக்கும் சமுதாயம், கூடப்போகிறது—ஒளியிழந்த கண்களையுடையோருக்கு வழி காட்ட! முதலாளித்துவ அமைப்புக்கு படுகுழிவெட்ட! ஜாதிபேதச் சனியனை விரட்டியோட்ட! சமதர்ம மலரைக் கொய்ய! சாசுவத பூந்தோட்டம் அமைக்க! இன்பத்திராவிடம்காண!

வடநாட்டாதிக்கம் — வளர்ந்து விட்டது. நம்வாழ்க்கையின் எல்லாத் துறைகளையும் கைப்பற்றிவிட்டது. நமது பூமி, சுடுகாடாகி வருகிறது! நாம், பிரேதக் கூடுகளாகி வருகிறோம்!! இந்த இழவு — இனியும் நீடிப்பா? எவனோ ஆள, அடங்கிக்கிடக்க, நாம் என்ன எலிகளா? இன்னல் நீக்கி, எப்போதுதான் நாம் இன்பங் காண்பது! இதற்கான வழிவகைகளைக் காணப்போகிறோம். நமது கழகம் ஒரு புதுநாளை சந்திக்கப்போகிறது. பொன்னான நேரம்! நமது தொண்டின் பலனைஉணர்ந்து மக்கள் ஆசையோடு நம்மை எதிர் நோக்கும் நேரம்!

மக்களின் நம்பிக்கை—மகத்தான ஒளிவிளக்கு. அது, நமக்கு கிடைத்திருக்கிறது. இதைப்பெற, நாம் பட்ட சங்கடங்கள், எத்தனை எத்தனை! அவைகளை ஒருமுறை,நினைத்துப்பாருங்கள், கிளம்புங்கள்!

ஒளிவிளக்கு—நம் கையில்.

நம்பிக்கை மலர்கிறது, நமக்கு—உலகத் தோட்டத்தின் மலர்வீசும் மணமாக நமது திராவிடபூமி,நிலைக்கும் நாள் நெருங்குகிறது.

அந்த இன்பநாளைக் காணப் போகிறோம் நாம் — திட்டங்கள் தீட்டி. அந்தத் திருநாளைக் காண வாரீர்! மக்கள் தரும் ஒளி விளக்கு—நமது மாநாடு. அதை ஏந்திச் செல்லும், இளம் இதயங்களே! திராவிடத்தின் செல்வங்களே! சிங்கமரபினரே! செயலுக்கஞ்சா மாணவ உலகமே—எதிர்கால சமுதாயமே! மறக்குடிமகளிரே! உழைப்புலகப் பெருமக்களே! முன்னணிக் கட்சியினரே! முதியோரே! ஆசைக் கனவு படைத்தோரே! அயராத சமுதாயத்தினரே! குலையாத உளத்தோரே! அருமை தங்கச்சகோதரர்களே! தாயகம்—நம்மை எதிர்பார்க்கிறது. நமது பணியை—விரும்புகிறது. தாயகத்தின் துயர் துடைக்கும்—திருப்பணி நமது. அதைப் புரியவாரீர்! புன்னகைப் பூந்தோட்டமாம் நமது மாநாடு காணவாரீர்! புது உலகின்—நல்விளக்கு—நமது மாநாடு. அதை ஏந்த வாரீர்! வாரீர்!! வாரீர்!!! "வாழ்க திராவிடம்! பெறுவோம் நல்வாழ்வு!" என முழக்குவோம், வாரீர்!!!

4-ம் பக்கத் தொடர்ச்சி

நண்பர்கள் பாரதிதாசன் சித்தரித்த 'இரண்யன் அல்லது இணையற்ற வீரன்' என்ற கதையைப் பல இடங்களில் நடத்தினார்கள். என்றாலும் அதுவும் ஆமை ஓட்டத்தில்தான் இருந்து வருகிறது. சென்னையில் சில தோழர்கள் 'முன்னேற்றவீரன்' என்னும் கதையை நடித்துக் காட்டினார்கள் என்றாலும் அதுவும் ஒரே இடத்தில் தேங்கிப்போய் இருக்கிறது. தொழில் முறையில் தோழர்கள் என். எஸ். கிருஷ்ணன், மதுரம், ராதா முதலிய அறிஞர்கள் உதவிபுரிகிறார்கள் என்பதோடு இன்னும் சிலதும் இருக்கலாம். அவை உற்சாகம், பொழுது போக்கு. என்பவற்றின்போரல் இல்லாமல் இன்னும் தைரியமாய் வெளியேறி வரவேண்டியது மிகவும் அவசியமாகும்.

சந்திரோதயமும், "ஒரு காலத்தில் அண்ணாதுரை, சந்திரோதயம் என்னும் நாடகம் நடித்தார், எங்கேயோ பார்த்ததாக எனக்கு ஞாபகம் இருக்கிறது" என்று சொல்லும் நிலைமைக்கு வராமல் தமிழ் நாட்டில் அது (சந்திரோதயம்) திக்குவிஜயம் செய்யவேண்டுமென்று ஆசைப்படுகிறோம்.

உண்மையில் 'சந்திரோதயம்' நல்ல தொண்டாற்றுகிறது. இரண்டு வருஷத்தில் குறைந்தது 50000 ரூ. அதற்கு சொந்தப் பொறுப்பில் சேகரம் செய்ய தமிழ் நாட்டில் தாராளமாக இடமிருக்கிறது. சமய சஞ்சீவிகளுடன் அரசியல் சேற்றில் புரண்டு அல்லல்படாமல் இம்மாதிரி தொண்டு உண்மையும் பயனளிக்கக் கூடியதுமாகும் என்று தெரிவித்துக்கொண்டு அண்ணாதுரையையும் காஞ்சி திராவிட நடிகர் கழகத்தாரையும் மனமார வாயாரப் பாராட்டி ஆசி கூறுகிறோம்."

தமிழ் நாட்டில், திக்கு விஜயம் செய்ய வேண்டும் என்று அன்று பெரியாரால் பாராட்டப் பட்ட 'சந்திரோதயம்' மீண்டும் நடக்கவிருக்கிறது.

இதில் சி. என். ஏ. ஏற்று நடித்து வந்த வேடத்தை, தோழர் கே. ஆர். ராமசாமி தாங்குகிறார்.

மு. கருணாநிதி
டி. எம். பார்த்தசாரதி
கலைக்குழு

இன்றைக்கிருப்பாரை............

"இன்றைக்கிருப்பாரை நாளைக்
கிருப்பரென்று எண்ணவோ
திடமில்லை, ஐயோ......!"

என்று பாடியபடி என் அறைக்குள் நுழைந்தான், நண்பன் நல்லமுத்து—பாடியபடி என்று சொன்னேன், தவறு, தவறு, அழுதபடி!! நல்லமுத்துவுக்குக் குரல் வளம் அடியோடு இல்லை என்று கூறவில்லை, பாடல் அப்படிப்பட்டதல்லவா!

"நல்லமுத்து! இதென்ன சோக கீதம்—வேதாந்த விசார விருத்தத்திலே ஈடுபட்டுவிட்டாயே, காரணம் என்னப்பா?" என்றேன்.

"பழைய வேதாந்த விசாரமல்லடா இது—இது புதிய பாடல், அரசியல் பாடல்," என்றான் முத்து.

இன்றைக்கு இருப்பவர் நாளை இறந்துபடக்கூடும், ஏனெனில் காயமே இது பொய்யடா, நல்ல காற்றடைத்த பையடா—இதுதானே ஆன்றோர் அருளிய அந்த அழுகைப் பாடலின் பொருள்" என்று கேட்டேன்.

"ஆன்றோர் அன்று அருளியது, வேறு காரணம்பற்றி — அடியேன் இப்போது அறைவது அக்காரணம் பற்றியல்ல—அரசியல் சம்பவம் என் பாடல். பூவுலக வாழ்வு நிலையற்றது என்ற பழைய போதனைக்காக அல்ல; இது வேறு"—என்றான் விளக்கத்தை விரைவில் தா மறுக்கும் தோரணையில்.

"போதும் உன் முன்னுரை—விஷயம் கூறு" என்றேன்.

"கூறுவேன், கேண்மினே! இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை, என்ற முதுமொழிப்படி, இப்போது காங்கிரஸ் மகா சபையிலே நடைபெறுகிறது. அந்தச் சபையிலே இன்று இருட்பவர்களை நாளைக்கு தொடர்ந்து அதிலே இருப்பார்களோ என்று எண்ண இடமில்லாதபடி ஆகிவிட்டது. அவ்வளவு நிலையற்றதாகிவிட்டது காங்கிரஸ் வாழ்வு! யார், எந்த நேரத்தில், எந்தக் காரணத்துக்காக, எந்த விநாடி, காங்கிரசை விட்டு வெளியேறிவிடுவார்களோ என்று எண்ணவேண்டிய நிலை பிறந்துவிட்டது. நாற்பதாண்டுகளாக உழைத்தேன், நாலாண்டு சிறையில் கிடந்தேன், முப்பதாண்டு மும்முரமாக காங்கிரசில் சேவை செய்தேன், மும்முறை சிறை சென்றேன், தடியடி பட்டேன், தாங்கொணாக் கஷ்டம் அனுபவித்தேன், அப்படிப் பட்ட நான், என் கண்ணுக்குக் கண்ணாக, உயிருக்கு உயிராகக் கருதிவந்த காங்கிரஸ் மகாசபையை விட்டு, 'போறேன் இதோ—போறேன் இதோ — போறேன் ஐயோ! போறேன்' — ஏனெனில், என் அருமைக் காங்கிரஸ், ஏகாதிபத்யத்தை எதிர்த்த காங்கிரஸ், ஏழையின் உழைப்பாலே உருவான காங்கிரஸ், இன்று, 'உழவுக்கும் தொழிலுக்கும் வஞ்சனை செய்து, வீணில் உண்டு கொழுத்திருப்போர்க்கு நன்மைகள் செய்து' கள்ளச் சந்தையருடன் நேசமும் கொண்டு, நாட்டைக் காடாக்கிவிட்டதுகாண், என்ன செய்வேன், அதனாலே நான் போகிறேன், வெளியே பொதுமக்களைக் காக்கப் புறப்படுகிறேன், காங்கிரசை ஒழிக்கக் கிளம்புகிறேன்'—என்று கூறியபடி நித்த நித்தம் சத்தமிட்டபடி பலர், வெளியேறியவண்ணம் உள்ளனர். இதைக் காணும்போதுதான், இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ தி... மில்லை, ஐயோ!—என்று பாடி அ... ல்லாமா என்று தோன்றுகிறது" எ... றான் நல்லமுத்து.

"ஆமாம், பலர் வெளியேறிவிட்டார்கள், கிருபளானி, பிரகாசம், ரங்கா, கேளப்பன், இப்படிப் பல பெரிய புள்ளிகள் வெளியேறிவிட்டார்கள்"—என்று நான் கூறினேன்.

"இவர்கள் மட்டுமா, நண்பனே! கடுமையாகவும் கொடுமையாகவும் எதிர்க் கட்சிகளைத் தாக்கி, குத்திக் குடல் பிடுங்கி இரத்தம் குடிக்க வல்ல சுத்தவீரன் நானடா, அடடா கேளடா, எந்தன் பெயர் கோடை இடியடா......! என்று பாடி பவனி வந்து, எதிர்க் கட்சிகளைச் சாடிச் 'சபாஷ்' பெற்ற, வேலூர் குப்புச்சாமி, கோட்டை வெளியிலே கோ வெனக் கதறி, போறேன் இதோ, நான் போறேன் இதோ, போறேன் ஐயோ......! என்று பாடிவிட்டார். அவர்மட்டுமா—ஊருக்கு ஊர் இதே சேதி—ஒவ்வொரு நாளும் இதே சேதி," என்றான்.

"உண்மைதான், திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் ஆதிமூலம் கூடக் காங்கிரசிலிருந்து விலகிவிட்டாராம்!" என்றேன்.

"பட்டியலைத் தயாரித்து அச்சடித்து ஒட்டினால், மாட்டுப் பெட்டிக்காரரில் பாதிபேர், வீட்டுக்குள்ளே சென்று கதவைத் தாளிட்டுக்கொள்வார்கள் — அவ்வளவுபோ, வெளியேறிவிட்டார்கள்"—என்றான் நல்லமுத்து.

"சேலம் சுப்பிரமணியம், சென்னை கன்னியப்பன் இவர்கள் கூட விலகிவிட்டார்கள்,"! என்று நான் கவனப்படுத்தினேன்.

"ஆமாம், ஆதித்தன் விலகிவிட்டார்" என்று பட்டியலில் பெயர் சேர்த்தான், நல்லமுத்து.

"பாரோ கொடுமுடி ராஜகோபாலனும், விலகிவிட்டாராம்"! என்றேன் நான்.

"அதனால்தான், இன்றைக்கு இருப்பாரை நாளைக்கு இருப்பர் என்று எண்ணவோ திடமில்லை, ஐயோ, என்று பாடினேன்," என்றான் நல்லமுத்து.

உண்மைதான் அவன் கூறுவது—எப்போதும், எந்தக் கட்சியிலிருந்தும் இப்படி வெளியேறு படலம், தொடர்ந்தும் மட மடவென்றும் இவ்வளவு அதிகமாக நடைபெற்றதில்லை. காங்கிரசின் இன்றைய நிலைமை அப்படியாகிவிட்டது-அதிலே இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பரென்று எண்ணவோ திடமில்லை!

—

★ சந்திரோதயம் ★

கலையின் மூலம், மௌடீகம் விரித்துள்ள வலையை அறுத்தெறிந்து வருகிறோம். மாநில மாநாட்டில், கலை நிகழ்ச்சிகள் எல்லாம், அந்தவைய அரும்பணிக்கா... ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இசை, நாடகம், இரண்டாலுமே இந்தப் பெரும் பொறுப்பைத்தான் நாம் நிறைவேற்றி வருகிறோம்.

சிலர் கூத்தாடுகிறார்கள், பாட்டு பாடுகிறார்கள், படம் பிடிக்கிறார்கள் என்று இன்று பேசுகிறார்கள்—எழுதுகிறார்கள்.

அவர்களும் முன்னொரு நாள் நமக்கு அளித்த உபதேசம், உற்சாக மொழி நாம் மறக்கவில்லை.

சந்திரோதயம், இடையில் இல்லாமலிருக்கலாம். மீண்டும் மீண்டும் தோன்றத்தான். அந்தச் சந்திரோதயத்தை நாட்டோர் மறக்கவில்லை.

மாநில மாநாட்டில், பத்தாண்டுகளுக்கு முன்னால், சென்னை மதுரை, ஈரோடு, திருச்சி, திருவத்திபுரம், திருவாரூர், சிதம்பரம் மற்றும் தமிழ் நாட்டின் முக்கிய இடங்களிலெல்லாம் நடந்த 'சந்திரோதயம்' நாடகம், பத்தாண்டு இடைவேளைக்குப் பிறகு மீண்டும் நடைபெற இருக்கிறது.

கே. ஆர். ஆர். குழுவினர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

ஈரோட்டில், 'சந்திரோதயம்' நடந்த பொழுது, பெரியார் பாராட்டுரை வழங்கியிருக்கிறார். 27—11—43ல் 'குடியரசு' தலையங்கத்தில் மூலம் புகழ்ந்திருக்கிறார்.

"தோழர் அண்ணாதுரை எம். ஏ., அவர்களால் எழுதப்பட்டு அண்ணாதுரை அவர்கள் நடிப்பு ஆசிரியராய் இருந்து பழக்கப்பட்ட காஞ்சி திராவிட நடிகர் கழகத்தார் சந்திரோதயம் என்னும் நாடகத்தை 19-11-43ல் ஈரோட்டில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்தினார்கள். இதன் விபரம் சென்ற வாரம் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது, நாடகம் பார்த்த மக்களுக்கு வெகு உணர்ச்சியாகவும் அறிவுக்கு நல் விருந்தாகவும், மானத்திற்கு உயர்தர வழிகாட்டியாகவும் தொடக்கம் முதல் முடிவுவரை விளங்கியது என்பது சிறிதும் மிகைப்படக் கூறியதாக ஆகாது.

இன்று ரஷ்ய நாடானது ஸ்டாலினது உருக்கு ஆட்சியின்கீழ் நிலை குலையாமல் இருந்து உலகத்தைக் காப்பாற்றி வருகிறது என்றால் அது பெரிதும் ஸ்டாலினது வீரமல்ல—வெற்றியல்ல—ஆற்றலல்ல என்று மும்முறை முரசறைகுவோம்.

மற்றென்னையெனில் அங்கு அம்மக்களுக்கு தலைவர்களும் உண்மை உணர்ச்சி உள்ளவர்களும் செய்துவரும் இடையறாப் பிரசாரமேயாகும்"

"அப்படிப்பட்ட பிரசாரங்கள் நடத்துவதில் இந்த மாதிரி நாடகமும் முதன்மையானதாகும். இதை நாம் சுமார் 10, 15 வருஷ காலமாகவே சிந்தித்து சிந்தித்து ஒன்றும் கைகூடாமல் இப்போது தோழர் அண்ணாதுரை அவர்கள் துணிவோடு கிளம்பி முகத்திற்குச் சாயம் பூசிக்கொண்டு மேடையேறிப் பாவலாப் போடவும் அதை ஒரு சமயத்தில் 5000 மக்கள் பார்த்துக் களிக்கும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறதையும் பார்த்து நாம் பெருமை அடையாமல் இருக்க முடியவில்லை.

சில நண்பர்கள் சில வருஷங்களுக்கு முன்னாலேயே திருச்சியில் முயற்சிசெய்து வெளிவந்தார்கள். என்றாலும் அது குடத்திற்குள் விளக்காய் இருக்கிறது. மற்றும் சில

(3-ம் பக்கம் பார்க்க)

5-ம் பக்கத் தொடர்ச்சி

முதுகிலே அறைந்தார்—சுவற்றிலே பிடித்து இடித்தார்—பாதகி! படுபாவி! மானம் போறதே — நீ தான் இதற்குக் காரணம் — அவன் பின்னே அவனை அனுப்பி விட்டு, இங்கே வேஷம்னா போடறே—ஊரார் என்ன சொல்வா — குடும்பம் என்ன கதி—பாவி! என்று பதறினார்.

"ஒருத்தரும் ஒருதவறும் சொல்லமாட்டா — அனந்தனுக்குப் பைத்யம் கிடையாது—கல்யாணிமேலே பிராணன் — பொருத்தமான கல்யாணம்னு சொல்லி, என்னைத் தான் வாழ்த்துவா—" என்றாள் தைரியமாக.

"ஓடிப்போன விபசாரிக்கு வக்காலத்து வாங்கிண்டா பேசறே!—" என்று கூவினார்.

"கூச்சல் போடாதேயும்—வெளியே தெரியலாமோ—பொண்ணுக்கு ரொம்பக் காச்சல்னு சொல்லி, கலியாணத்தை நிறுத்தி விடலாம்—" என்று பெரிய இடத்தார் கூறினார்.

"கேட்டிண்டிருந்தீரா?"—என்றார் பெண் வீட்டார்.

"ஆமாம்—என்ன செய்யறது—நான் வைத்தியத்தை முன்னாடியே ஆரம்பிச்சிருந்தா நன்னாயிருந்திருக்கும்," என்றார் ஆயாசமாக.

தலைமீது கைவைத்துக்கொண்டு, உட்கார்ந்தார், பெண் வீட்டார்.

"ஸ்வாமீ! விசாரப்பட்டு என்ன பலன்! தைரியத்தைக் கைவிடலாமோ! சரி, கொடுத்ததை எடும்..." என்றார்.

"என்ன சொல்றீர்......" என்று கேட்டார், பெண் வீட்டார்.

"இப்ப தந்தேனே, ஸ்வாமீ! ஐநூறு—அதையாவது கொடும்," என்று பெரிய இடத்தார் கேட்டார். கொடுத்தார் பெண்ணின் பெரியப்பா. திருமணம் நின்றுவிட்டது. தின்னனூரில், கலியாணி—அனந்தன் திருமணம் விமரிசையாக நடைபெற்றது, மறுநாள்.

—

A PLEA FOR UNDERSTANDING

By **S. VEDARATNAM, M. A.**

எஸ். வேதரத்தினம், M. A., எழுதியுள்ள இந்த அரிய ஆங்கில நூல்

* எதிரியின் இருட்டடிப்பு இனிப் பயன் தராது என்பதை உணர்த்துகிறது!

உங்கள் பிரதியைத் தவறாது பெற்றுக் கொள்ளுங்கள்!

மாநாட்டுப் பந்தலில் விலைக்குக் கிடைக்கும். விலை அணா 8.

விற்பனையாளருக்கு 20% கழிவு உண்டு. முன்பணமனுப்புவோருக்கு மட்டுமே புத்தகங்கள் அனுப்பப்படும்.
வி. பி. யில் அனுப்புவதற்கில்லை

வான்கார்ட் பப்ளிஷிங் ஹவுஸ், திராவிடநாடு நிலையம், காஞ்சிபுரம்.

பைத்தியம் தீர்ந்தால் திருமணம்—திருமணம் முடிந்தால் பைத்தியம் தீரும்

பழைய கதை!—புதிய பாடம்!!

"அவன் பித்துக்குளி — கிளி போன்ற பெண்ணை அவனுக்குத் தர இசைவாளோ! நியாயமாமோ! தர்மமாமோ!"—என்றார் பெண்ணுக்குப் பெரியப்பா. பெண் கேட்க வந்தவர், பெரிய இடத்துக்காரர். அவர் ஆயாசபபடாமல் சொன்னார், "என்ன மனுஷனய்யா நீர் — மாப்பிள்ளைக்குச் சித்த ஸ்வாதீனமில்லை—நான் மறைத்தா பேசுகிறேன் — புத்தி சரியில்லை, ஆனால் அவனை நான் அப்படியேவா விட்டுவிடுவேன்"?—என்றார்.

"தைலத்திலே பத்துவகை தேய்த்தாயிற்று—சூரணம் தந்தாயிற்றும்..." என்றார் பெண்ணின் பெரியப்பா!

"ஆமாம், அந்த வைத்திய முறைகள் பலிக்கவில்லை. ஆரம்பத்திலேயே நான் கவனித்திருந்தால் இவ்விதமாகி இராது — நான் நாட்டரசன்பேட்டைச் சந்தைக்குப் போகவும் திரும்பவுமே நேரம் சரியாக இருந்தது!" என்றார் பெரிய இடத்தார்.

"கண்ட மருந்து கொடுத்ததன் பலன், பையனுடைய மண்டையிலே குரங்குக் குட்டி புகுந்து விட்டதோன்னு தோன்றும்படியாகிவிட்டது!" என்றார் பெண்ணின் பெரியப்பா.

"பாருமே! முந்தாநாள் சாயரட்சை முந்திரிக்கொட்டையைத் தின்கிறேன்னு சொல்லி, எதைச் சாப்பிட்டான் தெரியுமோ?" என்று கேட்டார் பெரிய இடத்தார்.

"என்ன கர்மத்தையோ—சொல்லித் தொலையும்", என்று சலிப்புடன் கேட்டார், பெண்ணின் பெரியப்பா.

"பொடிமட்டையைச் சாப்பிட்டான்—போட்டேன் முதுகிலே இரண்டு ......" என்றார் பெரிய இடத்தார்.

"அழுதானோ?"—என்று சற்று அனுதாபத்துடன் கேட்டார், பெண்வீட்டார்.

"செச்சே! பையனை அடிக்கல்லே ஓய்! வேலைக்கார தடியனை! அவன் தடுத்திருக்க வேண்டுமென்னோ?"—என்று நியாயம் பேசினார் பெரிய இடத்தார்.

"இப்போ, நானே, பையனுடைய விஷயத்தைக் கவனிக்கிறதுன்னு தீர்மானிச்சுண்டேன், இதுவரை செய்த வைத்தியமெல்லாம போதாது—சரியில்லை. இப்ப நான் அவனுக்கு அதிர்ச்சிவைத்தியம்செய்யப் போறேன்" என்று கூறலானார் பெரிய இடத்தார்.

"அதென்ன தங்கமானும், அதிர்ச்சி வைத்தியம்...!" என்று ஆச்சரியத்துடன் கேட்டார், பெண் வீட்டார்.

"மூளையிலே கோளாறு மாப்பிள்ளைக்கு — எப்படியாவது, ஒரு அதிர்ச்சி அவனுக்கு ஏற்படும்படிச் செய்தா, மூளை, பழைய நிலைக்கு வந்துவிடும், கோளாறு இராது" என்றார் பெண் கேட்க வந்தவர். புரியவில்லை, மற்றவருக்கு.

"நான் ஒருவன் மட்டும்தான் துணிந்து அதைச் செய்யமுடியும். நான் செய்தாத்தான் சம்மதிப்பா. என்ன செய்யப்போறேன் தெரியுமோ, இரும்புக் காண்டியை அன்னு, பழுக்கக் காய்ச்சி, பையனோட முதுகிலே, நாலு இழுப்பு இழுத்துவிடப் போறேன் — சூடு போடறது ஓய், சூடு—வலி, எப்படி இருக்கும்—பிராணன் துடிக்குமேன்னோ—பையன் அலறி அடிச்சிண்டு அழுது புரண்டு, குதித்துக் கூத்தாடுவன்—அதிர்ச்சி ஏற்படும்—அந்த அதிர்ச்சியாலே, மூளையும் சரிபட்டுப் போகும். அதிர்ச்சி வைத்தியம், நிசசயம் பலன் தரும்—உமக்குப் பயமே வேண்டாம் — பெண்ணைத் தர சம்மதம் கொடும்—அவனை நான் மணப் பந்தலுக்கு அழைச்சிண்டு வருகிறபோது பாரும்—அதிர்ச்சி வைத்யத்தோட அற்புதம்னு உமக்கே விளங்கிவிடும்", என்றார் பெரிய இடத்தார். பேச்சைவிட, அவர் நீட்டிய சில பச்சை நோட்டுகள், பெண் வீட்டவரின் மனதை மாற்றின. முகூர்த்த நாள் குறித்தாகிவிட்டது.

* * *

"மாகேலரா, விசாரமு" வாசிக்கிறார்—உள்ளூர் மேளமல்ல—வெளியூர் நாயனக்காரர். இரு நூறு ரூபாய்ப் பட்டுச்சேலைகளும், எட்டு பவுன் செயின்களும், ப்ளூஜாகர் வைரங்களும், உலவுகின்றன — கோமளம், குந்தளம், சாரதா, சாமளா, என்ற பெயர்களில். மாப்பிள்ளை, திடீரென்று, கையைக் கொட்டிக்கொண்டு, சீராமச்சந்திரனே சீமன் நாராயணனே சீலோல சுந்தரனே, ராம், ராம், ராம்—என்று கத்தியபடி, ஆடுகிறான் — மாப்பிள்ளைத்தோழன், கிட்டே நெருங்க பயப்பட்டு தெருப்பக்கம் ஓடுகிறான்!

"என்னடி கூத்து இது?"

"அனுமத்தாண்டவமோடீ?"

"ஆறுவேலி நிலம்டி, ஆறுவேலி! கட்டாலே போறவன் ஆறுவேலி நிலத்துக்கு ஆசைப்பட்டுண்டு அப்சாவைப்பிடிச்சி, இந்தப் பித்துக் குளியிடம் ஒப்படைக்கிறான்"

இப்படி அம்மைகள்! ஒரே அல்லோலகல்லோலம். பெண்...பாவம்!

உள்ளே புரண்டு புரண்டு அழுகிறது—"நாயனத்தை நிறுத்து—டேய்! கிட்டு! நிறுத்தச் சொல்லடா நாயனத்தை—" கர்ஜிக்கிறார் பெரிய இடத்தார். "நாயனத்தைக் கேட்டா இந்த நாட்டியமாடுவனும்!"

"இதென்ன சேஷ்டை?"

"சித்தஸ்வாதீனமில்லை!"

"ஆமா — என்னமோ அதிர்ச்சி வைத்தியம் செய்யறதா சொன்னாரமே?"

"சொன்னார் —செய்யலை போலிருக்கு!"

"செய்தாராமே."

"பூரண குணமாகல்லை போலிருக்கு"

இப்படிப் புருஷாள்!!மாப்பிள்ளை மயக்கமாகிவிட்டார்.

பெண்ணின் பெரியப்பா "என் தலையிலே கல்லைப்போட்டீரே — ஓய்! என்ன ஆச்சு உம்ம அதிர்ச்சி வைத்தியம்—கண்ருவியா இருக்கே கதறிண்டிருக்காளே பொம்மண்டாட்டிகளெல்லாம் — மானம் போறதே ஓய்! என்ன ஆச்சு, அதிர்ச்சி வைத்தியம்?" — என்று கூறிக்கொண்டே, தலை தலை என்று அடித்துக்கொண்டார். பெரியஇடத்தார், அவரைத் தனியாக அழைத்துச்சென்று, இன்னும் சில பச்சை நோட்டுகளை நீட்டியபடி, "என் மீது சம்சயம் வேண்டாம்—நான் சொன்னது தான் — நிச்சயம் அதிர்ச்சி வைத்தியம் பலன் தரும்—சந்தேகப் படவேண்டாம்" என்று சமாதானம் கூறலானார்.

"ராம்—ராம்—னு கூத்தாடறானே ஓய்! கொரங்காட்டமா குதிக்கிறானே! — பித்தம் முத்தின்னா இருக்கு போலிருக்கு!" என்றார் ஆயாசமாக, பெண் வீட்டார், நோட்டுகளைப்பத்திரப்படுத்தியபடி.

"முத்தினா என்ன ஓய்! எவ்வளவு முத்தினாலும், அதிர்ச்சி வைத்தியத்தாலே குணமாயிடும்," என்று தைரியம் சொன்னார், பெரிய இடத்தார்.

"துளிகூடக் குணம் தெரியக் காணோமே—" என்று கேட்டார், பெண் வீட்டார்.

"எப்படி இதற்குள் தெரியும். நான் அதிர்ச்சி வைத்தியத்தைச் செய்தாத்தானே — செய்யல்லையே — கல்யாண காரியத்தைக் கவனிக்கவே நேரம் சரியாயிருக்கு—அதனாலே வைத்யம் செய்து பைத்தியத்தைக் குணப்படுத்த சமயம் கிடைக்கல்லே—கலியாணமானதும், பாரும், வைத்யம் செய்துவிடுகிறேன், பைத்யம் பஞ்சு பஞ்சாப் பறந்து போகும். கல்யாணம் முடிஞ்சுதுன்னு, நிம்மதியா இருக்கும்—நேரம் கிடைக்கும் — வைத்யத்தை நல்ல முறையிலே செய்துட்டலாம்," என்றார் பெரிய இடத்தார்.

"பைத்யத்தைப் போக்கிவிடறேனுன்னு சொன்னீரே, கலியாணத்துக்கு முன்னதாகவே" என்றார் பெண் வீட்டார்.

"சொன்னேன் ஓய்! ஆனா, நேரம் இல்லை, என்னை என்ன செய்யச் சொல்றீர். கலியாணத்துக்காசு, நகை நட்டு செய்ய, புடவை வேட்டிகள் வாங்க, விருந்துக்கான ஏற்பாடுகள் செய்ய, நாட்டியக் கசசேரிக்கு நளினாவை ஏற்பாடு செய்ய, இவைகளுக்கெல்லாம், அலைய வேண்டி இருந்தது. அதனாலேவைத்ய விஷயமாமாக் கவனிக்கநேரம் இல்லை. பயம் துளிகூட வேண்டாம்—கலியாணம் முடியட்டும்—பிறகு பாரும் நம்ம வைத்யத்தை. போய், பொண்ணை அழைச்சிண்டுவாரும்—" என்று தூண்டினார், பெரிய இடத்தார். பெண்ணின் பெரியப்பா, உள்ளே சென்றார், சஹதர்மிணியை அழைச்சு "எங்கேடி கல்யாணி? போய் அழைச்சிண்டுவா, அவ, தலையிலே என்ன எழுதியிருக்கோ அதன்படிதானே நடக்கும்" என்று வேதாந்தம் பேசினார். பாரியாள், அவரை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டு நின்றாள். "நீ வேறே உசிரை வாங்காதே—போ—அழைச்சிண்டுவா, கல்யாணியை," என்று கோபமாகக் கூவினார்.

சாந்தமாக அம்மை, "எங்கே போய் அழைச்சிண்டுவரது— அவளும் அனந்தனும், பனிரெண்டே கால் மெயிலுக்குப் போயிண்டே இருக்கா — இன்னேரம் ரயிலும் புறப்பட்டிருக்கும்", என்று கூற, சூடு போடப்பட்டவர்போல அவர் குதித்து, "என்னடி சொல்றே—என்ன சொல்றே—கல்யாணி போயிட்டாளா—அந்துவோடவா—என்னடி கர்மம்......!" என்றார்.

"ஏன், திமுதிமுன்னு குதிக்கிறீர்—அவ தலையிலே என்ன எழுதி இருக்கோ!" என்றாள் குறும்பாக, மனையாட்டி.

(4-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

போகும் வழிதான் என்ன, என்று எண்ணி எண்ணிப் பார்த்து ஒரு தெளிவும் ஏற்படாததால், திக்குத் தெரியாத காட்டில் உலவும் சிறுமி போல, நாம் எல்லாம் திகைப்புற்று இருப்பது போலவும், "ஓஹோ! பாமரர்காள்! இது தெரியாமல் மெத்தக் கஷ்டப்படுவதை அறிந்து கொண்டோம் — இதோ கூறுதும் கேண்மின்—இது நாள்வரை நாம் ராஜ்யபாரம்சுமந்திருந்ததால் இதைக் கூறாதிருந்தோம் — மீண்டும் ராஜ்ய பாரம் கிடைப்பதற்குள், இதைக் கூறுகிறோம்" என்று கூறிக் கொண்டல்லவா ஆச்சாரியார் முன்வருவதுபோலத்தெரிகிறது! வேறு எது தெரியாவிட்டாலும் இந்த நாட்டு மக்களுக்கு தெரிந்திருக்கும் ஒரே விஷயம் இதுதானே — ராமான்னு சொல்லு போறகதிக்கு நல்லது—சிவான்னு சொல்லு போறகதிக்கு நல்லது, என்று கூறுதார் யார்?—யமனைக் குறித்துத்தான் பேசாதவர் யார்? ஆதிசங்கரர்தானா, இந்த உண்மையைக் கண்டறிந்து கூறுகிறார்? ஆண்டிகள் ஒவ்வொருவரும் பாடுகிறார்களே இதை—சொல்லட்டுமா—பாடல்கள்........

"நமனுடை முறை நாள் வருகிற காலை, பொன்னொடும் போகான் பொருளொடும் போகான் புலம் பினும் போகான் புகழினும் போகான்" — என்ற பழம் பாடல் உண்டு.

"கிட்டே வந்து யமபடர் பாசம் வீசிடும் போது சொல்லு சிவநாமம் தனையே எட்டிப் போவார் கிட்டே வாரார், எமதூதுவர்"—என்றதெருக் கூத்துப்பாட்டு உண்டு.

"காலன்வரு முன்னே
கண் பஞ்சடை முன்னே
பாலுண் கடைவாய் படுமுன்னே
மேல்விழுந்தே உற்றார்
அழுமுன்னே
ஊரார் சுடுமுன்னே
குற்றாலத்தானையேகூறு"

இது பட்டினத்தார் பாடல்—இந்தப் பாடலிலே உள்ள கருத்தேதான் அதிமேதாவித் தனத்தின் துணை கொண்டு, 'பஜகோவிந்த' மூலம் ஆச்சாரியார் அறிவிக்கும் பெருண்மை.

சுரங்கம் தோண்டுபவர், உள்ளேயிருந்து செம்பொன் கொண்டு வருவார் என்று தானே எதிர் பார்ப்பர் எவரும்— செத்துக்கிடக்கும் சுண்டெலியைக் கண்டெடுத்தால் கைகொட்டிச் சிரிக்க மாட்டார்களா? ஆச்சாரியார், சாதாரண மக்கள் எதைச் சர்வ சாமான்யமாகப் புரிந்து கொண்டு, சதா சர்வ காலமும் பேசிக்கொண்டிருக்கிறார்களோ, அதையேதானா அரும்பாடு பட்டுக் கூறவேண்டும்! இப்போது அவர் பஜகோவிந்தம் கூறி, எந்தப் புரியாத பிரச்சினையை விளக்கிவிட்டார், எந்தத் தத்துவத்தை நிலை நாட்டிவிட்டார்? க்ரயமே இது பொய்யடா, என்பது போன்றது தானே முப்முற்ற கனமாகி, இரு முறை எக்சலன்ஸி ஆகியவர் கண்டெடுத்த ஞானமுத்து! இதற்குப் பாருங்களேன், என்னென்ன சிறப்புரைகள், பாராட்டுரைகள், ஆஹா ஹாக்கள் — பஜகோவிந்தம் செய்வதானாலும் இப்படிப்பட்ட 'வாய்ப்பு' வைத்துக்கொண்டல்லவா செய்யவேண்டும், நம்மவர்களும் செய்கிறார்களே, பஜனை—வேகாத சுண்டலுக்கும் வாழைப் பழத்துக்கும்!

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

சென்னை S. I. A. A. திடலில்

டிசம்பர் 13, 14, 15, 16 நாட்களில்.

தலைவர்: அண்ணாதுரை

திறப்பாளர்: கே. கே. நீலமேகம்

ஓவியக் கண்காட்சி திறப்பாளர்: சி. பி. சிற்றரசு

வரவேற்புக் குழுத் தலைவர்: என். வி. நடராசன்

முதல் நாள் காலை 9 மணிக்கு ராயபுரம் தலைமைக் கழக கட்டிடத்திலிருந்து

மாபெரும் ஊர்வலம்

13—12—51

காலை	9	மணி	ஊர்வலம்
பகல்	1	,,	கொடியேற்று விழா
,,	1-10	,,	ஓவியக் கண்காட்சி திறப்பு விழா:
மாலை	3-7	,,	இன்னிசை: சிதம்பரம் செயராமன் திருவாரூர் நமசிவாயம் நாகூர் அனீபா சென்னை கே. ஆர். செல்லமுத்து தோழியர் கஸ்தூரி.
,,	7-8	,,	"நான் கண்ட ரஷ்யா" கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
இரவு	10-30	,,	**போராட்டம்**—திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத் தோழியர்கள் நடிப்பது. **குலமுலேனரிபில்லா**—மாதர்பாக்கம் ஆந்திர நண்பர்கள் நடிக்கும் தெலுங்கு நாடகம்.

இன்று நாடகத்திற்கு மட்டுமே கட்டணம்.

14—12—51

காலை	10-30	,,	மாநாடு திறப்பு விழா
	12—1	,,	சிறப்பு சொற்பொழிவுகள்.
மாலை	4—8	,,	சிறப்பு சொற்பொழிவுகள்: இரா. நெடுஞ்செழியன், சம்பத், கருணாநிதி, மதியழகன், மனோகரன்.
இரவு	10	,,	**இளைஞன் குரல்**—மு. கருணாநிதி, குணசித்ர நடிகர் எம். ஜி. சக்கிரபாணி ஆகியோர் நடிக்கும் நாடகம்.

15—12—51

காலை	10-30—12	மணி	வரவேற்புரை
மாலை	3—6	,,	தலைவர் தேர்தல்
,,	6—8	,,	தலைவர் உரை
இரவு	10—30	,,	**ஜெமீன் மாளிகை** நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமியும் குழுவினரும் நடிக்கும், செழியன் தீட்டிய நாடகம்.

16—12—51

காலை	10—1	மணி	தீர்மானங்கள்
மாலை	3—7	,,	,,
இரவு	7—8	,,	தலைவர் முடிவுரை
,,	10-30	,,	**சந்திரோதயம்** கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும் சி. என். ஏ. தீட்டிய நாடகம்

நான்கு நாட்களிலும் ஓவியக் கண்காட்சி உண்டு கட்டணம் ஓரணா.

நன்கொடையாளர்	ரூ. 10.		**பார்வையாளர்**	(நான்கு நாட்களுக்கும்)	ரூ. 3
வரவேற்பாளர்	ரூ. 6.		**பார்வையாளர்**	(தினசரி)	ரூ. 1
பிரதிநிதி	ரூ. 5.		**பெண்கள்**	(தினசரி)	அணா 8

மணிமொழியார்
கே. மனோகரன்
செயலாளர்கள்.
என். சாம்பு
பொருளாளர்.
கே. எம். கண்ணபிரான்
வி. என். மார்க்கு
தோ. ப. தலைவர்கள்.

சி. வி. ராசன்
ஏ. கே. சாமி
ஆர். டி. அரசு
கிருஷ்ணன்
பந்தல் அமைப்புக் குழு.

இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.
ஈ. வே. கி. சம்பத்
வி. எம். ஜான்
மதியழகன், பி. ஏ.
பராங்குசம்
தீர்மான ஆய்வுக் குழு.

கே. ஏ. மதியழகன், பி. ஏ.
சௌரிராசன்
தில்லை-வில்லாளன்
ஓவியக் கண்காட்சிக் குழு.

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95. Tirukkachinambi St., Kancheepuram.